**II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT**

**THIRUVALLUR AT POONAMALLEE**

**LAOP No.127 / 2004**

Deposition of witness for the CW.1
Respondent solemnly by C.Gopikrishnan, Examiner
in accordance with the provision of Act I for 1873 on 16.08.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Tmt. Chellarani David | Caste | : | |
| Father's / Husband's Name | : | David Pirasitham | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

**குறுக்கு விசாரணை :** (எதிர் மனுதாரர்/நில எடுப்பு அலுவலர் சார்பில்)

சாட்சி கோ.சா.1 திருமதி. செல்லராணி டேவிட், மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

எனக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தியதற்காக நில எடுப்பு அலுவலர் பிறப்பித்த Award No.1/2002 என்று சொன்னால் சரிதான். இந்த நில எடுப்பு சம்மந்தமாக நில எடுப்பு அலுவலர் எனக்கு கொடுத்த அறிவிப்பின் பேரில் நான் அவர் முன்பு முன்னிலையாகினேன். நில எடுப்பு அலுவலர் என்னுடைய நிலத்திற்கு சென்ட் ஒன்றிக்கு ரூ.670/- நிர்ணயம் செய்தார் என்று சொன்னால் சரிதான். நான் இந்த தொகை குறைவானது என்று நில எடுப்பு அலுவலர் முன்பாக எழுத்து மூலமான ஆட்சபணையை தாக்கல் செய்திருக்கிறேன். இந்த விசாரணையின் போது நில எடுப்பு அலுவலர் நியாயமான விலையை நிர்ணயம் செய்வதற்காக நில எடுப்பு பகுதியில் பதிவு செய்யப்பட்ட 387 விற்பணை ஆவணங்களை பரிசீலணை செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நில எடுப்பு அலுவலர், பூந்தமல்லி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.3726/1999 ஐ பரிசீலனை செய்து இந்த ஆவணத்தில் தொடர்புடைய நிலத்தின் மொத்த பரப்பு 1 ஏக்கர் 3 சென்டுக்கு ரூ.69,000/- நிர்ணயம் செய்தார் என்றால் நான் இதனை ஆட்சேபிக்கிறேன். இது பற்றி என்னிடம் தனியாக தெரிவிக்கவில்லை. மேலே சொன்ன ஆவணம் தொடர்புடைய நிலத்தின் சர்வே

எண்.143/1 நெமிலிச்சேரி கிராமம் என்றால் இதனை நான் ஆட்சேபிக்கிறேன். மேலும் என்னுடைய கட்டடத்தினை பார்த்து அதனுடைய மதிப்பை நிர்ணயம் செய்ய பொதுப் பணித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்ய வந்தார்கள் என்றால் நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றிருந்தேன் அதனால், அதிகாரிகள் யாரும் ஆய்விற்கு வரவில்லை. என்னுடைய கட்டிடம் மருத்துவமனை கட்டிடம் அதனை மற்ற சாதாரண கட்டிடங்களைப் போல மதிப்பீடு செய்ய முடியாது. பொதுப் பணித்துறை அதிகாரிகள் என்னுடைய கட்டிடத்தை விதிமுறைப்படி ஆய்வு செய்து என்னுடைய கட்டிடத்திற்கு ரூ.14,15,994/– மதிப்பீடு செய்தார்கள் என்றால் சரியல்ல அவர்கள் கட்டடத்தை நேரடியாக பார்க்காமல் அலுவலகத்தில் இருந்து மதிப்பு நிர்ணயம் செய்தார்கள். பொதுப் பணித்துறை அதிகாரிகள் அலுவலகத்தில் இருந்தே மதிப்பு நிர்ணம் செய்தார்கள் என்பது அவர்கள் அனுப்பி கடிதத்தின் வாயிலாக எனக்கு தெரியும். நான் அந்த கடிதத்திற்கு தொடர்ச்சியாக என்னுடைய ஆட்சேபணையை தெரிவித்து கொண்டே வருகிறேன். நான் அப்படிபட்ட எந்தவொரு ஆட்சேபணையையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இதுவரை நில எடுப்பு அலுவலர் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த தொகையினை நான் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். நில எடுப்பு அலுவலரால் வைப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.22,13,579/– என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த தொகை வைப்பீடு செய்யப்பட்டதை தெரிந்து கொண்டு தெரியாது என்று சொல்லுகின்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கட்டிடத்திற்கு ரூ,14,15,994/– ரூபாயும் அதில் உள்ள மரங்களுக்கு ரூ.2,681/–யும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது என்றால் நான் தற்போது தான் இதனை தெரிந்து கொண்டேன். இந்த விவரங்களை எல்லாம் நான் தெரிந்து கொண்டே வைப்பீடு செய்யப்பட்ட தொகையினை திரும்ப பெறாததால் நில எடுப்புச்சட்டம் பிரிவு 18ன் கீழாக நான் தொகை உயர்த்த வேண்டி கோரிக்கை வைக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட சென்டுக்கு ரூ.670/– என்பது அதிகப்படியான தொகை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ளபடி உயர்த்தப்பட்ட நில மதிப்பை நான் பெறமுடியாது என்றாலும் எனது மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : – இல்லை.**